| O.S.No. 268/2018 | PW1: திரு. ராமலிங்கம்<br>த/பெ. திரு. பச்சையப்பன் | 12-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. இந்த வழக்கினை நான் என்னுடைய சொத்திற்காகத்தான் போட்டுள்ளேன், 2-ம் வாதி அர்ஜூனன் சொத்திற்காக போடவில்லை. அதனால், நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்டுள்ள சொத்துக்களுக்கும், 2-ம் வாதி அர்ஜூனனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். A ஷெட்யூல் சொத்தில் 1 பகுதியான B ஷெட்யூல் சொத்து 5 சென்ட் என்று சொன்னால் சரிதான். A ஷெட்யூல் சொத்தின் மொத்த விஸ்தீரனம் மொத்தம் 25 சென்ட். B ஷெட்யூல் சொத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளது.

2. சர்வே எண். 416-ன் மொத்த விஸ்தீரணம் 60 சென்ட் ஆகும். அந்த 60 சென்ட்டானது சகோதரிகளான அன்னம்மாள், வள்ளியம்மாள், அங்கம்மாளுக்கு சொந்தம் என்றால் சரிதான். அன்னம்மாளை ஸ்ரீபெரும்புதூர் பக்கத்தில் உள்ள வளியகரணை கிராமத்தில் கட்டிக்கொடுத்தார்கள். அண்ணம்மாள் மேற்படி ஊரில் வசித்து வந்து அங்கேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் அவர் வந்து செல்வார். அண்ணம்மாளுக்கு 1 மகன் மற்றும் 3 மகள்கள் வாரிசுகள் ஆகும். மேற்படி 4 பேரும் இறந்துவிட்டார்கள். வள்ளியம்மாளை அளத்துரையில் கட்டிக்கொடுத்தார்கள். வள்ளியம்மாள் அளத்துரையில் குடியிருந்து வந்து வாரிசுகள் ஏதுமின்றி இறந்துவிட்டார். அங்கம்மாளை தாவா சொத்து உள்ள ஊரிலேயே திருமணம் செய்து கொடுத்தார்கள். அங்கம்மாளுக்கு 5 மகன்கள், 1 மகள் வாரிசுகள் ஆகும். மகன்கள் பெயர் பச்சையப்பன், ரங்கநாதன், சந்திரன், ஜெயராமன், மணி ஆகும். மகள் பெயர் சரோஜா ஆகும்.

3. 60 சென்ட்டினை அங்கம்மாள், வள்ளியம்மாள், அண்ணம்மாள் ஆகியோர் எந்த ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அது ஞாபகமில்லை. அந்த பாகப்பிரிவினை ஏற்படும்போது விவரம் தெரியாது. மேற்படியார்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்பதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த 60 சென்ட் நிலத்தினை மேற்படி மூவரும் எவ்வாறு பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்று வழக்குரையில் சொல்லியுள்ளீர்களா என்றால்

சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் மேற்படி 3 பேரும் எந்தவொரு பாகப்பிரிவினையும் செய்துகொள்ளவில்லை என்ற சொன்னால் சரியல்ல.

4. அந்த 60 சென்ட்டினை அண்ணம்மாள், வள்ளியம்மாள் ஆகிய இருவரும் அனுபவித்து வந்ததில்லை என்று சொன்னால் சரிதான். அங்கம்மாள் மட்டுமே அவரது காலம் வரையில் மேற்படி சொத்தினை அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அங்கம்மாள் 60 சென்ட்டில் 25 சென்ட்டினை 1981-ம் ஆண்டு அவரது குமாரர்களான மேற்படி 5 பேர் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் யாருக்கு எவ்வளவு சென்ட் என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஆளுக்கு தலா 5 சென்ட் என்று எழுதப்பட்டது. அதில் ஒவ்வொரு 5 சென்ட்டிற்கும் 4 எல்லைகள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை.

5. அந்த 25 சென்ட்டினை மேற்படி 5 பேரும் ஊர் வழக்கப்படி தலா 5 சென்ட்டினை வாய்மொழி பாகமாக பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான், அதில் பிரித்துக்கொண்டு வீடு கட்டிக்கொண்டார்கள். அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதில் என் தந்தை பச்சையப்பனுக்கு மேலண்டை பக்கம் 5 சென்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது. பச்சையப்பனுக்க ஒதுக்கப்பட்டதுபோல் அதற்கு கிழக்கு பக்கம் நடராஜனுக்கு 5 சென்ட் பாகம் ஒதுக்கப்பட்டது, அதற்கும் கிழக்கே சந்திரன், அதற்கும் கிழக்கே ஜெயராமன், அதற்கும் கிழக்கே மணி ஆகியோர்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது.

6. பச்சையப்பன் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கிழக்கு மேற்கு - 24 அடி, வடக்கு தெற்கு - 82 அளவிற்கு குடிசை வீடு கட்டி அனுபவித்து வந்தார். எனது தந்தை பச்சையப்பன் 1995-ம் ஆண்டு இறந்துவிட்டார். நானும், 2-ம் வாதியும்தான் என் தந்தைக்கு வாரிசுகள் ஆவோம். என் தந்தை இறந்ததற்கு பிறகு என் தந்தைக்கு பாகமாக வந்த சொத்தில் கிழக்கு மேற்கு - 16 அடியில் ஆயாத்தியப்படி வீடு கட்டிக்கொண்டேன் என்று சொன்னால் 24 அடியில் 16 அடி வீடு கட்டிக்கொண்டேன். பச்சையப்பனுக்க ஒதுக்கப்பட்டதே கிழக்கு மேற்கு - 22 அடி என்றாலும், அதில் 16 அடியில் வீடு கட்டிக்கொண்டார் என்றாலும், 6 அடி பின்னாடி செல்வதற்கு காலியாக

விட்டுவிட்டார் என்றாலும், சரியல்ல. அதற்கான பட்டா சர்வே எண். 416/35 என உட்பிரிவு செய்யப்பட்டு எனது பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. வடவண்டை பக்கம் கிழக்கு மேற்கு - 24 அடி என்றும், தென்அண்டை பக்கம் கிழக்கு மேற்கு - 24 என்று குறிப்பிட்டுதான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அர்ஜூனன் 25 செண்ட் போக மீதமுள்ள 35 செண்ட்டில் ஒரு பகுதியில் தொகுப்பு வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான், அவர் பாட்டிக்கு வந்த பாகத்தில் வீடு கட்டி உள்ளார். அது வள்ளியம்மாளுக்கு வந்த பாகம் ஆகும். வள்ளியம்மாள் சொத்து சம்மந்தமாக 2-ம் வாதிக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

8. என் பாட்டி வள்ளியம்மாள் 2-ம் வாதிக்கு கொடுத்த இடம் எவ்வளவு என்றால் 7 செண்ட் ஆகும். என் பாட்டி அர்ஜூனனுக்கு 7 செண்ட்டினை கொடுத்து சுமார் 30 வருடத்திற்கு மேல் இருக்கும். வள்ளியம்மாள் இறந்து சுமார் 35 வருடத்திற்கு மேல் ஆகின்றது என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. வள்ளியம்மாள் இறக்கும்போது எனது சகோதரர் அர்ஜூனனுக்கு 5, 6 வயது இருக்கும். அதனால், வள்ளியம்மாள் இறப்பதற்கு முன்பு மீதமுள்ள 35 செண்ட்டில் 7 செண்ட்டினை என் சகோதரர் அர்ஜூனனுக்கு கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது போல் அவரது சகோதரரான நடராஜனுக்கு கிழக்கு மேற்கு 22 அடி, வடக்கு தெற்கு - 85 அடி பாகம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவரும், அவருக்கு பாகமாக வந்த சொத்தில் 1999-ம் ஆண்டு 22 அடியில் 16 அடியில் மெத்தை வீடு கட்டிக்கொண்டும், 6 அடி செல்வதற்கு வழியாக விட்டார் என்று சொன்னால் சரிதான். நடராஜன் காலமானதற்கு பிறகு அவரின் வாரிசான 1-ம் பிரதிவாதி ஏழுமலை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அதற்கான பட்டா 416/36 ஏழுமலை பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

10. என் அப்பாவுடன் பிறந்தவர் 2-ம் பிரதிவாதி சந்திரன் ஆவார். அவருக்கும் கிழக்கு மேற்கு -22 அடி, வடக்கு தெற்கு 82 அடி பாகமாக ஒதுக்கப்பட்டது. அவரும்

16 அடியில் மெத்தை வீடு கட்டிக்கொண்டும், 6 அடி செல்வதற்கு வழியாக விட்டார் என்று சொன்னால் சரிதான். அதற்கான பட்டா 416/37 சந்திரன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தை சந்திரன் அவரது மகனான 3-ம் பிரதிவாதி முருகன் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். தற்போது அந்த இடத்தினை 3-ம் பிரதிவாதி முருகன் அனுபவித்து வருகிறார்.

11. அதே வகையில் ஜெயராமன், மணி ஆகிய இருவருக்கும் அதே மேற்படி அளவுகளிலேயே சொத்து ஒதுக்கப்பட்டு அதில் வீடு கட்டியும், செல்வதற்கு வழியும் விட்டு அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். ஜெயராமனுக்கு சர்வே எண். 416/38-ன் படி பட்டா வழங்கப்பட்டது. 4-ம் பிரதிவாதி ஜெயராமன் இவ்வழக்கு நிலுவையில் இருந்து வந்தபோது இறந்துவிட்டார். ஜெயராமன் 2017-ம் ஆண்டு அவரது குமாரரான 5-ம் பிரதிவாதி வெங்கடேசனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரிதான். அதன்படிக்கு ஜெயராமனின் பாக சொத்தினை 5-ம் பிரதிவாதி வெங்கடேசன் அனுபவித்து வருகிறார்.

12. 6-ம் பிரதிவாதிக்கு சர்வே எண். 416/39-ன் படி பட்டா வழங்கப்பட்டது. 6-ம் பிரதிவாதி மணி பெயரில் பட்டா வழங்கும்போது கூடுதலாக விஸ்தீரணம் குறிப்பிட்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் 4-ம் பிரதிவாதி ஜெயரானுக்கும் கூடுதல் விஸ்தீரணம் கண்டு பட்டா வழங்கப்பட்டது. ஏழுமலையின் சொத்தில் குறைவாக பட்டா கொடுக்கப்பட்டதற்காக, ஜெயராமனுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட இடத்தை ஏழுமலைக்கு ஜெயராமன் அந்த இடத்தை எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

13. ஆக மேற்படி அங்கம்மாளின் வாரிசுகள் வீடு கட்டி அனுபவித்து வரும் சொத்து சம்மந்மாக எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, எனக்கு 1 1/2 சென்ட் குறைவாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனக்கு பட்டா 3 1/2 சென்ட்டிற்குத்தான் வழங்கப்பட்டது. எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட இடத்தை விட குறைவாக பட்டா வழங்ககப்பட்டது என்பதற்கு ஆதாரமாக அந்த பட்டாவினை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த பட்டாவினையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள வழக்கிலும், என் தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தில் 1 1/2 சென்ட் குறைவாக பட்டா வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

14. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையினை படித்து பார்த்தேன். அந்த எதிர்வழக்குரையில் அனைவருக்கும் கிழக்கு – மேற்கு 22 அடி பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அவரவர்களுக்கு பாகமாக வந்த 22 அடியினைத்தான் அவரவர் அனுபவித்து வருவதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். 5 சென்ட்டிற்கு பட்டா வழங்குவதற்கு பதிலாக குறைவாக 3 1/2 சென்ட்டிற்கு பட்டா வழங்கப்பட்டது சம்மந்தமாக வருவாய்த்துறை அலுவலகத்தில் முறையீடு செய்தீர்களா என்றால் இல்லை. அவ்வாறு எனக்கு குறைவாக பட்டா வழங்கப்பட்டிருக்குமேயானால் அதைப்பொறுத்து வருவாய்த்துறை அலுவலகத்தில்தான் முறையீடு செய்திருக்கவேண்டுமே தவிர இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறானது என்று சொன்னால் சரியல்ல.

15. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனக்கு கிழக்கு மேற்கு – 22 அடி, வடக்கு – தெற்கு 82 அடி உரிமையானது என்றும், அதை நான் அனுபவித்து வருகிறேன் என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 60 சென்ட்டில், 25 சென்ட் பாகப்பிரிவினை செய்யப்பட்டது போக மீதமுள்ள 35 சென்ட்டானது பொதுவில்தான் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த 35 சென்ட்டினை அங்கம்மாளின் வாரிசுகள் 5 பேரும் பொதுவில் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தில் பிரதிவாதிகள் உரிமை கோரவுமில்லை என்றாலும், அவர்கள் எனது அனுபவத்தினை தடை செய்ததில்லை என்றாலும் சரியல்ல. ஆனால், வேண்டுமென்றே நான் எனது சொத்தினை பிரதிவாதிகள் தடை செய்ய முற்பட்டதாக பொய் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வியாஜ்ஜியமூலம் இல்லை என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.12 19:09:57 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**